# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 134 · செவ்வாய்க்கிழமை Tuesday · 11.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# நெல், கரும்பு கொள்முதலுக்கான ஊக்கத்தொகை உயர்வு

## சட்டசபையில் முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: செப்டம்பர் 1-ம் தேதி முதல் நெல் கொள்முதல் பருவம் தொடங்கவுள்ள நிலையில்,நெல் மற்றும் கரும்புக்கான ஊக்கத்தொகையை அதிகரிக்கப்படுவதாக சட்டப்பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நான்காம் நாளான இன்று, சட்டப்பேரவையின் 110 விதிகளின் கீழ் பேசிய முதலமைச்சர் விஜய், நெல் மற்றும் கரும்புக்கான ஊக்கத்தொகை அதிகரிக்கப்படுவதாக அறிவித்தார்.

இதுதொடர்பாகபேசிய அவர், "விவசாயிகள் நெல் மற்றும் கரும்பைப் பயிரிடவும், அறுவடை செய்யவும், விற்பனை செய்யவும் தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து உழைத்து வருகின்றனர். இந்த சூழ்நிலையில், தமிழ்நாட்டின் நிதிநிலைசீராகஇல்லாவிட்டாலும்,நெல் மற்றும் கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு நெல் மற்றும் கரும்புக்கான ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.

நெல் கொள்முதல் பருவம் வரும் செப்டம்பர் 1ஆம் தேதி தொடங்க உள்ளது. அதனை கருத்தில் கொண்டு குறைந்தபட்சஆதரவுவிலையுடன், மாநில அரசின் ஊக்கத்தொகையாக சன்னரக நெல்லுக்கு ரூ.289, பொதுரக நெல்லுக்கு ரூ.159 உயர்த்தி வழங்கப்படுகிறது.

இதன்மூலம் சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,750, பொதுரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,600 கிடைக்கும். மாநில அரசு நெல்லுக்கான ஊக்கத்தொகையை ஒரேஆண்டில்ரூ.156-க்கு மேல் உயர்த்தி வழங்குவது தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

அதேபோன்று, 2025-26 கரும்பு அறுவடைப் பருவத்தில்சர்க்கரைஆலைகளில் பதிவு செய்து கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு, மத்திய அரசின் நியாயமான மற்றும் லாபகரமான விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.3,290.50 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேல், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பு ஊக்கத்தொகையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.709.50 வழங்கப்படும்.இதன்மூலம் விவசாயிகளுக்கு ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மொத்தம் ரூ.4,000 கிடைக்கும். கடந்த ஐந்து ஆண்டுகளில் கரும்புக்கான சிறப்பு ஊக்கத்தொகை ரூ.156 மட்டுமே உயர்த்தி வழங்கப்பட்ட நிலையில், தற்போது முதல் ஆண்டிலேயே ரூ.360.50 உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், மாநில அரசால்கரும்புக்கானசிறப்பு ஊக்கத்தொகையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ஒரேஆண்டில்ரூ.134-க்கு மேல் வழங்கப்படுவது தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவே முதல்முறையாகும்.

எங்கள் அரசு விவசாயிகளை ஒருபோதும் கைவிடாது. விவசாயம் சிறக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கவும் என்றும் உறுதுணையாக இருக்கும்" எனத் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர்

# கேரளா பெயரை 'கேரளம்' என்று மாற்றுவது உள்பட 4 மசோதாக்கள் அறிமுகம்



புதுடெல்லி: நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் 16-வது நாளான இன்று எதிர்க்கட்சிகளின் கடும் அமளி காரணமாக இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மேலும், மக்களவையில் நான்கு மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் 16-வது நாளான (ஆகஸ்ட் 10) காலை 11 மணிக்கு அவை நடவடிக்கைகள் தொடங்கிய சில நிமிடங்களிலேயே, பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டங்களால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சில நிமிடங்களில் மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

அதன் பின்னர் மதியம் 12 மணிக்கு இரு அவைகளும் மீண்டும் கூடின. அப்போது, போராட்டங்களுக்கு மத்தியிலும் மக்களவையில் நான்கு மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன: தீர்ப்பாயச்சீர்திருத்த மசோதா (2026), சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா (2026), கேரள மாநிலப் பெயர் மாற்ற மசோதா (2026) மற்றும்தேசியகூட்டுறவு மேம்பாட்டுக் கழக திருத்த மசோதா (2026) ஆகியவை இதில் அடங்கும்.


இந்தச் சூழலில் டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீதான காவல் துறை நடவடிக்கை மற்றும் ராமர் கோயில் நன்கொடைகள் திருட்டு விவகாரம் குறித்து அரசிடமிருந்துபதில் கோரி எதிர்க்கட்சிகள் கடும்அமளியில் ஈடுபட்டது.இதனால் மக்களவையில் தொடர் அமளி நிலவியதால், அவை பிற்பகல்2மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவையில் சில பணிகள் மேற்கொள்ளபட்டாலும், அங்கேயும் அமளி ஏற்பட்டதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக இன்று அவையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த வியூகத்தை வகுப்பதற்காக, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் அறையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

மழைக்காலக் கூட்டத்தொடர் முழுவதும் மக்களவை நடவடிக்கைகள் தொடர்ந்து இடையூறுகளைச் சந்தித்து வருகின்றன.அவையில்இதுவரை அறிமுகப்படுத்தப்பட்ட எட்டு மசோதாக்களில் ஆறு மசோதாக்கள் விவாதம் இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டுள்ளன.

## ஜார்க்கண்ட் சட்டப்பேரவை நோக்கி பேரணி:

# நீரை பீய்ச்சியடித்த போலீஸ்; ஜாலியாக டான்ஸ் ஆடிய மாணவர்கள்



ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையை முற்றுகையிட முயன்ற மாணவர்கள் மீது போலீசார்நீரைபீய்ச்சி அடித்த நிலையில், அதற்கு அஞ்சாத மாணவர்கள் தண்ணீரில் நனைந்தபடி ஜாலியாக டான்ஸ் ஆடியசம்பவம்பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஜார்க்கண்ட் மாநில அரசு பணியாளர் தேர்வாணையம்நடத்திய தேர்வுகளில் பெரும்முறைகேடுகள் நடந்ததாகவும், வினாத்தாள் கசிந்ததாகவும் கூறி அங்குள்ளமாணவ,மாணவிகள் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விவகாரத்தை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததால்,இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் திரண்டு தலைநகர் ராஞ்சியில் உள்ள சட்டப்பேரவை நோக்கி பேரணியாக புறப்பட்டனர். இவர்களை தடுக்க ஆங்காங்கே போலீசார் இரும்பு தடுப்புகளை அமைத்து, பலத்த பாதுகாப்பு வளையத்தை உருவாக்கியிருந்தனர்.

மாணவர்கள் போலீசாரின் தடுப்புகளை உடைக்க முயன்றதால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. கூட்டத்தை கலைக்க போலீசார் முதலில் தடியடி நடத்தினர். பின்னர் கண்ணீர் புகைக்குண்டுகளையும் வீசினர். அப்போதும் மாணவர்கள் கலைந்து செல்லாததால்,ராட்சத 'வாட்டர் கேனான்' வாகனங்கள் வரவழைக்கப்பட்டு, மாணவர்கள் மீது அசுரவேகத்தில் தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டது.

போலீசார் தண்ணீரை அடித்ததும் மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,

அங்குதான் 'ஜென்-ஜி' மாணவர்கள், போலீஸ்அடித்ததண்ணீரை 'ரெயின் டான்ஸ்' போல் நினைத்து, குத்தாட்டம் போடத் தொடங்கினர். சில மாணவர்கள் போலீஸ் வாகனத்தின் முன்பே நின்று கைகளை தட்டி, உற்சாகமாக நடனமாடினர். "நீங்கள் தண்ணீரை அடித்து எங்களை கலைக்க முடியாது" என்று சவால் விடுப்பது போல, தண்ணீரில் நனைந்தபடியே அவர்கள் ஆடிய டான்ஸ் வீடியோக்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் காட்டுத்தீ போல பரவி, லைக்குகளை குவித்து வருகிறது.

இந்த போராட்டத்தின் உச்சக்கட்டமாக, கடந்த 9 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து உடல்நலம் பாதிக்கப்பட்ட மாணவர் தலைவர் தேவேந்திர நாத்,ஸ்ட்ரெச்சரில் படுத்தபடியே பேரணிக்கு வந்து மாணவர்களுக்கு ஆதரவு தந்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடந்த மாதம் நடைபெற்ற 202526ஆம் கல்வி ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் சேர்க்கை பெறுவதற்கான மாணவர் சிறப்பு குறைதீர் முகாமில் கலந்துகொண்ட மாணவர்களில்,கல்லூரி கட்டணம் செலுத்துவதற்கான உதவித்தொகை கோரிய மாணவர்களில் இருந்து தகுதி பெற்ற 38 மாணவர்களுக்கு ₹1,88,725 மதிப்பிலான காசோலைகள் மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், அவர்கள் இன்று 10.8.26 வழங்கினார்

## ஊத்துமலை அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில்

# பசுமை பள்ளி திட்டத்தின் கீழ் நெகிழியை ஒழிப்புபோம் சுற்றுச்சூழலை பாதுகாப்போம் விழிப்புணர்வு



தென்காசி கல்வி மாவட்டம் சுரண்டை அருகே ஊத்து மலை அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் பசுமைபள்ளிதிட்டத்தின் கீழ் நெகிழியை ஒழிப்புபோம் சுற்றுச்சூழலை பாதுகாப்போம் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

பள்ளி தலைமை ஆசிரியர் சத்திய மூர்த்தி தலைமை தாங்கினார் உதவி தலைமை ஆசிரியர் ராணி சமித்தர வரவேற்றார்

வடக்குகாவலாகுறிச்சி பஞ்சாயத்து தலைவர் பாலசுப்பிரமணியன், கீழக்கலங்கள் பஞ்சாயத்து தலைவர் சந்திர சேகர், முத்தம்மாள் புரம் பஞ்சாயத்து தலைவர் முருகன், காவலாகுறிச்சி பஞ்சாயத்து துணை தலைவர் செல்வராஜ் அரசு பள்ளி பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன், நவஜீவன் டிரஸ்ட் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராதா ஆகியோர் முன்னிலைவகித்தனர் ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் எம் திவ்யா மணிகண்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு

நெகிழியை ஒழிப்புபோம் சுற்றுச்சூழலை பாதுகாப்போம் விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்து பேசினார்.

இப்பேரணியில் சராண சாரணியர் இயக்கம், இளம் செஞ்சிலைவை சங்கம் சார்ந்த மாணவ மாணவிகள் மற்றும் பள்ளி பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ஒழிப்போம் ஒழிப்போம் நெகிழியை ஒழிப்போம் பூமியை காப்போம் என முழக்கம் மிட்டு பதாகையை ஏந்தி வெங்கடேஸ்வரபுரம் பேருந்து நிறுத்ததிலிருந்து சந்தை விளக்கு வரை பேரணியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர் இறுதியில் ஆங்கில ஆசிரியர் சுதாகர் நன்றியுரை வழங்கினார் நிகழ்வில் பள்ளி மேலாண்மைக்குழ தலைவர் உச்சிமாகாளி, அறிவியல் ஆசிரியர் சொர்ணலதா ஓய் விய ஆசிரியர் மனோசா, ஆய்வக உதவியாளர் முத்துலெட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்

## அச்சிறுப்பாக்கம் அருகே

# மழை வேண்டி கிராம மக்கள் ஊரணி பொங்கல் வைத்து வழிபாடு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள சிறுபேர்பாண்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு உத்தரவு பொன்னியம்மன் ஆலயத்தில் ஆடி மாதத்தை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு கிராம பொதுமக்கள் ஒன்று கூடி மழை வரவேண்டியும் விவசாயம் செழிக்க வேண்டியும் உலக மக்கள் நலம் பெற வேண்டியும் நோய் நொடியின்றி மக்கள் வாழ வேண்டியும் 200க்கும் மேற்பட்ட பெண்கள் கோவில் அருகாமையில் ஊரணி பொங்கல் வைத்து அம்மனை வழிபட்டு சென்றனர்.

இந்த ஊரணி பொங்கல் நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# தஞ்சாவூரில் நடைபெற்ற இண்டர்நேஷனல் சிலம்பம் போட்டியில் கோவை பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி மாணவ மாணவிகள் அசத்தல்



இண்டர்நேஷனல் அளவிலான சிலம்பம் போட்டி தஞ்சாவூரில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள உள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது இதில் கோவை பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் இதில் பெண்கள் 35 வயது பிரிவில் சாஹிதா பேகம் தனி திறமை போட்டியில் முதல் இடத்தை பிடித்தார் ஆண்கள் 15 வயதுகுட்பட்ட சிலம்பம் தொடு முறை போட்டியில் பர்ஹான் முதல் இடத்தை பிடித்தார் மேலும் யோகேஷ். தாஸீன். அபூபக்கர் சித்திக் ஆகியோர் சிலம்பம் தொடுமுறை போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது வெற்றிபெற்றனர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் நினைவு கோப்பை வழங்கப்பட்டது மேலும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி நிறுவனர் சிலம்பம் மாஸ்டர் சிஹான் ஜெமிஷா அவர்கள் பாராட்டினார்.



# தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர் பாலசுந்தரம் துணை ஆட்சியர் மகள் பூப்புனித நீராட்டு விழாவில் பங்கேற்பு

தூத்துக்குடி ,முத்துநகர்,அம்மு பேலஸில் வைத்து 9-8-26ல்விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (முத்திரை)ஆக பணிபுரியும் திரு. வே. செல்வகுமார் அவர்களின் புதல்வி செல்வி செ. லத்திகா வின் பூப்புனித நீராட்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது . இவ்விழாவில் தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர்,வழக்கறிஞர் T.C.பாலசுந்தரம் சிறப்பு விருந்தினராக குடும்பத்தினருடன் கலந்து கொண்டு செல்வி லத்திகா வை வாழ்த்தி பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். மேலும் இவ்விழாவில் அரசு ஊழியர்கள்,அரசு அதிகாரி கள், வியாபாரிகள்,தேவேந்திர பேனாக்கள் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



இலஞ்சி ராமசாமிப்பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் 10.8.26 நடைபெற்ற தேசிய குடற்புழு நீக்க நாள் முகாமில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் அனைத்து மாணவ/மாணவியர்களும் தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.



மாவட்ட ஆட்சியர் .ரஞ்ஜீத் சிங், 10.8.26 புதிய பேருந்து நிலையத்தில் இருந்து கல்லூரி மாணவியர்கள் பங்கேற்ற போதைப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# இலவச வீட்டு மனை பட்டா வழங்கக்கோரி பொதுமக்கள் மனு



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (10.08.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், சமூக அடக்குமுறைக்கு எதிரானகூட்டமைப்புஒருங்கிணைப்பாளர் புதியவன் என்கிற மா. சண்முகம் தலைமையில், ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், தென்முகம் வெள்ளோடு கிராமம், தேவணம்பாளையம் பகுதியில் வசிக்கும் 25-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.தங்களுக்குஇலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும் எனக் கோரி, மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி அவர்களிடம் பொதுமக்கள் மனு அளித்தனர். மனுவில், தேவணம்பாளையம் பகுதியில் நீண்ட காலமாகவசித்து வரும்தங்களுக்கு சொந்தமாகவீட்டு மனை இல்லாததால், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திரைப்பட தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்திக்கு தமிழக அரசு பதவி



தமிழ் சினிமாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்டின் (AGS Entertainment) தலைமை செயல் அதிகாரி(CEO) அர்ச்சனா கல்பாத்தி. இவரது நிறுவனத்தின் தயாரிப்பில் நடிகரும், தற்போதைய தமிழக முதல்-அமைச்சருமான விஜய் நடித்த 'பிகில்', 'கோட்' உள்ளிட்ட திரைப்படங்கள் வெளியாகின.

இந்த நிலையில், தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்திக்கு தற்போது தமிழக அரசு பதவி வழங்கப்பட்டுள்ளது. கோவில்களுக்கு மரபுசாரா அறங்காவலர்களை நியமிப்பதற்கான தகுதியான வேட்பாளர்களை தேர்வு செய்யும் குழுவில் திரைப்பட தயாரிப்பாளர் அர்ச்சனாகல்பாத்தி இடம் பெற்றுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;- "இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட, ஆண்டு வருமானம் 10 லட்சத்திற்கு மேலுள்ள திருக்கோவி ல்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்திட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை தேர்வு செய்து உரிய பெயர்ப்பட்டியல் தயாரித்து அளித்திட, கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்ட மாநிலக்குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. தவத்திரு சிவஞான பாலயசுவாமிகள்பொம்மபுரம் ஆதினம், மயிலம் - தலைவர்
2. டாக்டர் கே.ராமநாதன், மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி(ஓய்வு) - துணைத் தலைவர்
3. அர்ச்சனா கல்பாத்தி அகோரம் - உறுப்பினர்
4. ப.ரா.சம்பத், இ.ஆ.ப. (ஓய்வு) - உறுப்பினர்
5. மா.சுமதி (எ) சுமதிஸ்ரீ - உறுப்பினர்
6. த.வேல்முருகன் - உறுப்பினர்
7. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் - பதவி வழி உறுப்பினர்/ செயலர்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி

# வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்களை வழங்கினார்



தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பித்த விளாத்திகுளம், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு 'விஜயலட்சுமி - கதிர்வேல் சேரிட்டபிள் டிரஸ்ட்' நிதி உதவியுடன் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா கோவில்பட்டியில் நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி தலைமை தாங்கி, தேர்வு செய்யப்பட்ட 25-க்கும்மேற்பட்டபயனாளி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முக்கிய நிர்வாகிகள், வட்டாரத் தலைவர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



# கோவையில் பல் மருத்துவமனையை முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி திறந்து வைத்தார்

கோவை ஆர்.எஸ்.புரத்தில் தமிழகத்தின் முதல் எலைட் டென்டல் ஸ்டுடியோ தொடக்கம்

நவீன தொழில்நுட்பத்துடன் அனைத்து பல் சிகிச்சைகளும் ஒரே இடத்தில் அமைந்துள்ள மையத்தை முன்னால் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி திறந்து வைத்தார்.

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில், தமிழகத்தின் முதல் கிளையாக புதிய நவீன எலைட் டென்டல் ஸ்டுடியோபல் மருத்துவ மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழாவில், . முன்னாள் அமைச்சர்,தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்எஸ்.பி.வேலுமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல் மருத்துவ மையத்தை திறந்து வைத்தார்.

பல் மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, பொதுமக்களுக்கு ஒரே இடத்தில் அனைத்து விதமான பல் சிகிச்சைகளையும் வழங்கும் வகையில் இந்த புதிய பல் மருத்துவ மையம் அமைக்கப்பட்டுள்ளது. முன்னதாக எலைட் டென்டல் ஸ்டுடியோ நிறுவன இயக்குனர்கள்,டாக்டர் ஃபாத்திமா நிஃப்லா,அமல் சித்தார்த், ஜாஃபர் ஹம்ஸா,மற்றும் ஜசீம் ஆகியோர் . கூறுகையில், பற்களின் பொது பராமரிப்பு முதல்பல்சொத்தை, பல் ஈறு தொடர்பான பிரச்சினை கள், வேர் சிகிச்சை,பல் அகற்றுதல், செயற்கைப் பற்கள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் இங்கு வழங்கப்படுகின்றன. மேலும், பற்களின் வரிசையை சீரமைத்தல், பற்களை அழகுபடுத்துதல், புன்னகையை மேம்படுத்துதல் உள்ளிட்ட அழகு சார்ந்த பல் சிகிச்சைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுளளது குறிப்பாக, பற்களின் அமைப்பு மற்றும் வாய் ஆரோக்கியத்தை நவீன முறையில் பரிசோதித்து,நோயாளிகளின் தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கும் வகையில் நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல் மருத்துவத்தில் தொடர்ந்து வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம், சிகிச்சையின் துல்லியத்தையும் நோயாளிகளின் வசதியையும் மேம்படுத்தும் வகையில் இந்த மையம் செயல்பட உள்ளது.

மேலும், பல் சிகிச்சைக்காக வெவ்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையை தவிர்த்து, பல் மருத்துவம், பல் வரிசை சீரமைப்பு மற்றும் பல் அழகுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளை ஒரே இடத்தில் பெறும் வகையில் இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

கோவையில் தொடங்கப்பட்டுள்ள இந்த தமிழகத்தின் முதல் எலைட் டென்டல் ஸ்டுடியோ, நவீன பல் மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு எளிதாக கிடைக்கச் செய்யும் புதிய முயற்சியாக அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது..

# கோவையில் இளைஞர்களை தொழில்முனைவோராக உருவாக்கும் ஆர்ய வைசிய அறிவுசார் மாநாடு

## தமிழகத்தில் இருந்து சுமார் 10,000பேர் பங்கேற்றுள்ளதாக மாநாட்டின் தலைவர் பேட்டி




இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைத் தேடுவதைவிட, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழக ஆர்ய வைசிய அறிவுசார் மாநாடு 2026 கோவை நீலாம்பூர் பகுதியில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் 10000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். ஒரு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் 12 மணி நேரம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் சுமார், 30-க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர். நான்கு அறிவுசார் அரங்குகள் உள்ளிட்ட பல்வேறு அரங்குகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளுக்கான கண்காட்சியும் இடம்பிடித்துள்ளது.

தொழில்முனைவு, தொழில்நுட்பம், உற்பத்தித் துறை, நிதி, தலைமைத்துவம், புத்தாக்கம், அறிவியல், தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிலரங்குகள் நடைபெற்றது

இந்த மாநாட்டின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்த மாநாடு திட்ட தலைவர் சுரபி கார்த்திக் கூறியதாவது.. 40-க்கும் மேற்பட்ட நகரங்கள், பேரூராட்சிகள் மற்றும் கிராமங்களுக்குச் சென்று 4,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களிடம் இம்மாநாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களிடம் திறமை, கல்வி மற்றும் சாதிக்கவேண்டும்என்ற ஆர்வம் இருந்தபோதிலும், வழக்கமான வேலைவாய்ப்புகளுக்கு அப்பால் உள்ள வாய்ப்புகள் குறித்து பலர் அறிந்திருக்கவில்லை. வேலைவாய்ப்புகளைத் தேடுவதிலிருந்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மனநிலைக்கு இளைஞர்களை அழைத்துச் செல்வதே இந்த மாநாட்டின் நோக்கம் என தெரிவித்தார். இந்தமாநாட்டில்,டாக்டர் ஏ. கலியமூர்த்தி, ஐபிஎஸ், ஜி.ஆர். ராதாகிருஷ்ணன், ஜிஆர்டி குழும நிர்வாக இயக்குநர்,ஜி.ஆர். அனந்தபத்மநாபன், ஜிஆர்டி குழும நிர்வாக இயக்குநர், ஓய்வுபெற்ற மேஜர் மதன் குமார், மதுரை வீரன் மாரிமுத்து, குரு மித்ரேஷிவா, கே. அண்ணாமலை உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

### கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள ராஜஸ்தானி சங்க வளாகத்தில்

# ஜெகன்நாத் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் பிராப்பர்ட்டீஸ் சார்பில் மஹா ருத்ராபிஷேக பூஜை நடைபெற்றது

## ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்களது கரங்களால் சிவபெருமானுக்கு அபிஷேகம் நடத்தினர்

ஆன்மீக உணர்வை மேம்படுத்தவும், பக்தி மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தவும், ஜெகன்நாத் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் பிராப்பர்ட்டீஸ் வழங்கும், பரமசிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மிகப் புனிதமான வேத யாகங்களில் ஒன்றான மகா ருத்ர அபிஷேக விழா மற்றும் ஒரு லட்சம் ருத்ர பாராயண நிகழ்ச்சி, கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள ராஜஸ்தானி சங்க வளாகத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த மாபெரும் ஆன்மீக நிகழ்ச்சி 20-ம் வருடமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.




இந்நிகழ்வின் மூலம் உலக அமைதி, வளமான வாழ்க்கை, ஆரோக்கியம் மற்றும் அனைவரின் நலனுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் வாய்ப்பு பக்தர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களைச்சேர்ந்தஏராளமான பக்தர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

மதியம் 12.00 மணி முதல் பக்தர்கள் தாங்களே கலந்து கொண்டு அபிஷேகம் செய்யும் நிகழ்வுடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியுடன், மாலை 5.00 மணிக்கு மகா ருத்ர அபிஷேகம், மாலை 6.30 மணிக்கு மகா அலங்காரம், பின்னர்மாலை7.00மணிக்கு மகாதீபாராதனை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து அனைத்து பக்தர்களுக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது, மகா ருத்ராபிஷேக விழாவில், சிவபெருமானுக்கு பல்வேறு அபிஷேகப் பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன. 1008 லிட்டர் பசும்பால், 1008 தாமரைப் பூக்கள், 306 லிட்டர் தயிர், 108 இளநீர், 108 லிட்டர் கரும்புச் சாறு, 108 லிட்டர் பஞ்சாமிர்தம், 108 லிட்டர் பன்னீர், 108 லிட்டர் திருமஞ்சனம், 108 லிட்டர் சந்தனம், 108 லிட்டர் பழரசம், 108 கிலோ விபூதி, 18 கிலோ கரும்புச் சர்க்கரை, 18 கிலோ அரிசி மாவு, 18 லிட்டர் தேன் மற்றும் 18 லிட்டர் நெய் உள்ளிட்ட புனித திரவியங்களால் அபிஷேகம் நடைபெறுகிறது. மேலும், மற்றும் அனைத்து இந்து நதிகளிலிருந்தும் கொண்டு வரப்பட்ட புனித நீர்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகங்களும் நடைபெற்றது.

# தூத்துக்குடியில் புதிய போக்குவரத்து காவல் மையத்தை எஸ்.பி. சிவபிரசாத் தொடங்கி வைத்தார்



தூத்துக்குடியில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் போக்குவரத்தைச் சீரமைக்கும் நோக்கில், குரூஸ் பர்னாந்து சிலை அருகே அமைக்கப்பட்டுள்ள புதிய மாநகரப் போக்குவரத்து காவல் மையத்தை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாநகரில் போக்குவரத்தைச் சீரமைக்கக் காவல்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக குரூஸ் பர்னாந்து சிலை அருகே புதிய போக்குவரத்து காவல் மையம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத்தூத்துக்குடி நகரக் காவல் துணை கண்காணிப்பாளர் சுனில் தலைமை தாங்கினார். போக்குவரத்து காவல் ஆய்வாளர் சுனை முருகன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்ட மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத், புதிய போக்குவரத்து காவல் மையத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தொடர்ந்து, ஒலிபெருக்கி மூலமாகப் பொதுமக்களுக்குப் போக்குவரத்து விதிகள் குறித்தும், சாலைப் பாதுகாப்பு குறித்தும் அறிவுரைகளை வழங்கினார். மேலும், பணியில் உள்ள போக்குவரத்து காவலர்களுக்குத் தலைக்கவசங்களை வழங்கிப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் வேலவன் ஹைப்பர் மார்க்கெட் இயக்குநர் ஆனந்த், வட்டத் தெப்பம் வியாபாரிகள் சங்கத் தலைவர் சரவணமூர்த்தி, செயலாளர் ராஜேஷ், பொருளாளர் சரவணன், மத்திய வியாபாரிகள் சங்கப் பிரதிநிதி எம். உதயசூரியன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE



The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம் அளிப்பதுதான் மாநில உரிமை

## முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்



அரசுத் துறை, கல்வி நிறுவன நிகழ்ச்சிகளில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதை கட்டாயமாக்கும் வகையில், சட்டசபையில் முதல்-அமைச்சர்ஜோசப்விஜய் தனித்தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ் என்றால் கெத்து

இந்தியாவின் நெற்றியில் வைக்கக்கூடிய வெற்றிப் பொட்டுதான் நம் தமிழ்நாடு. தமிழ் என்றால் கெத்து; தமிழ் என்றால் அது தனி பவர். ஒரு பெயரே, ஒரு சொல்லே மிகப்பெரிய வரலாறுன்னா அது தமிழ்தான்.தமிழ்மொழி என்றால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் ஒன்றாக வந்து நிற்கும். தமிழ் வெறும் மொழி மட்டும் அல்ல; நம் உயிர்; பேசினால் ஓசை மட்டும் இல்லை, உணர்வும் வரும்; நம் தாய்மொழி குறித்த உணர்வை புரியவைக்க தாய் மொழி, தமிழ் மொழி என்று சொல்வதே போதும்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம் அளிப்பதுதான் மாநில உரிமை. தமிழ்த்தாய் வாழ்த்தின் மரியாதையை பாதுகாப்பதில் தவெக அரசு சமரசம் செய்யாது. உணர்வோடு கலந்திருக்கக்கூடிய தமிழை பின்னுக்குத் தள்ளினால் எப்படி பொறுத்துக்கொள்வது?; தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்துதான் முதலிடத்தில் இருக்க வேண்டும்; அது நம் உரிமை. தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட வேண்டும் என்று கூறுவது அரசியல் சார்ந்த விவாதமாக மாறவேண்டிய அவசியம் இல்லை. கட்சி வேறுபாடுகளை கடந்து ஒன்றிணைந்து அனைத்து உறுப்பினர்களும் இந்த தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறினார்.

இதனையடுத்து முதல்-அமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானத்துக்கு திமுக, அதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. திமுக சார்பில் எம்.எல்.ஏ. கோவி.செழியன் பேசுகையில், "அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு திமுக ஆதரவு தெரிவிக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்து பாட வேண்டும் என முதலில் அரசாணை வெளியிட்டவர் முன்னாள் முதல்-அமைச்சர் கலைஞர். தமிழ்த்தாய் வாழ்த்தை கட்டாயம் பாட வேண்டும் என 2021 டிச. 17இல் அரசாணை வெளியிட்டார் மு.க.ஸ்டாலின். தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை இயற்றியவரின் பெயரில் உள்ள பல்கலைகழகத்திலேயே 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டது அடிக்கடி மாறுபடும் இந்த சூழலை மாற்றிட இதனை சட்டமாக மாற்ற வேண்டும் என்று கூறினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.08.2026) பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று குறைகள் கேட்டறிந்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.08.2026) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.

# ஈரோடு பெருந்துறை விசிக புதிய நிர்வாகிகள் நியமனம்: மாவட்ட தலைமை அலுவலகத்தில் கேக் வெட்டி கொண்டாட்டம்



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் புதிய நிர்வாகிகளை அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார். இதில் மாவட்டத் துணைச் செயலாளர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள்,நகர மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், துணை அமைப்புகளின்பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய பொறுப்புகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிர்வாகிகள் அனைவரும் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்ட தலைமை அலுவலகத்தில் ஒன்று கூடினர்.தங்களுக்குப் பொறுப்புகளைவழங்கப்பரிந்துரை செய்த மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலனுக்கு மாலை மற்றும் சால்வை அணிவித்து நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜெயக்குமார், கவிதா, ஜெனிபர் ரோஸ்லின் மேரி, அமுதா கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ராஜேஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர். ஒன்றிய நிர்வாகிகளான பெருந்துறை கிழக்கு ஒன்றியச் செயலாளர்கள் ஜெகதீசன்,ரமேஷ்வீரன்,வடக்கு ஒன்றியச் செயலாளர் குமார், சென்னிமலை ஒன்றியச் செயலாளர்கள் நவீன்குமார், ஜெபராஜ்,கிழக்குபெருந்துறை ஒன்றியப் பொருளாளர் ரா. ஜீவா, பெருந்துறை ஒன்றியத்துணைச்செயலாளர்கள் சௌந்தர், ராஜா, மேற்கு ஒன்றியத் துணைச் செயலாளர் அபிராமி ஸ்ரீநிதி,பெருந்துறை ஒன்றியப் பொருளாளர்தனலட்சுமி ஆகியோரும்கலந்துகொண்டனர்.

நகர மற்றும் பேரூர் நிர்வாகிகளான பெருந்துறை நகரச் செயலாளர் முருகசாமி, சென்னிமலை நகரச் செயலாளர் விஜயா, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர்ச் செயலாளர் லதாமணி, காஞ்சிக்கோவில் பேரூர்ச் செயலாளர்கள் கந்தசாமி, சேகர் துரைசாமி, பெத்தாம்பாளையம் பேரூர்ச் செயலாளர் தாமோதரன், பெருந்துறை பேரூர்த் துணைச் செயலாளர் ரவிச்சந்திரன், பெருந்துறை நகரத் துணைச் செயலாளர் சுமதி, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர்த் துணைச் செயலாளர் பிரபாகரன், காஞ்சிக்கோவில் பேரூர்த் துணைச் செயலாளர் சின்னுச்சாமி, கருமாண்டிசெல்லிபாளையம் ஒன்றியப் பொருளாளர் மகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும், துணை அமைப்புகளின் நிர்வாகிகளான இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்டச் செயலாளர் பரமேஸ்வரன், ஒன்றியச் செயலாளர்கள் ஸ்ரீநாத், சங்கீதா, மேற்கு ஒன்றியச் செயலாளர் அட்சயா, கிறிஸ்துவ சமூக நீதிப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாச்சிமுத்து கொமரன், ஒன்றியச் செயலாளர் தீமோத்தேயு, மகளிர் விடுதலை இயக்க ஒன்றியச் செயலாளர் லதா, மகளிர் பிரிவு மாவட்டப் பொருளாளர் அம்சா, விவசாய பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர், தொழிலாளர்விடுதலைமுன்னணி மாவட்ட அமைப்பாளர் கௌதம், ஊடக மைய அமைப்பாளர் செண்பகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகர் மாசிமலை ரங்கசாமி நினைவு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில், தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு விடுப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாமில் பள்ளி மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரையினை (அல்பெண்டாசோல்) ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.08.2026) வழங்கினார்.

# கனிமங்களை வெளி மாநிலம் கொண்டு செல்ல தடை: தமிழக அரசு பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு



தமிழகத்தில் உட்கட்டமைப்பு, நகரமயமாக்கல் பணிகளுக்கான கருங்கல் மற்றும் ஜல்லிக் கற்கள் போன்ற கட்டுமான பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்யவும், செயற்கை விலையேற்றத்தைதடுக்கவும், தமிழ்நாடு சட்ட விரோத கனிமச் சுரங்கம் கனிம போக்குவரத்து மற்றும் சேமிப்பு, தடுப்பு விதிகளில் கடந்த ஜூலை 9-ம்தேதிதிருத்தம்செய்யப்பட்டது.

இதனடிப்படையில் காரைக்கால், புதுச்சேரி தவிர மற்ற மாநிலங்களுக்கு கருங்கல், ஜல்லிக் கற்களை கொண்டு செல்ல மூன்று மாதங்களுக்கு தடை விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. விதிகளை செல்லாது என அறிவிக்கக் கோரியும் மது பிரேமநாதன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.,'திருத்தவிதிகளுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற வேண்டும். உரிய உரிமம் பெற்று எடுக்கப்பட்ட கனிமங்கள் எங்களுக்குச் சொந்தமானது. அவ ற்றை எங்கு விற்க வேண்டும் என முடிவெடுக்க எங்களுக்கு உரிமை உள்ளது. மூன்று மாத தடைக்கு தடை விதிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள்,மனு தாரரின் கோரிக்கை தொடர்பாக இரண்டு வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் தடுப்பது குறித்த வாராந்திரம் ஆய்வுக்கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

ஈரோடு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் தடுப்பது குறித்த வாராந்திரம் ஆய்வுக்கூட்டம் ஒவ்வொரு திங்கள் தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்று வருகிறது.

ரோடு மாவட்டத்தில் ஜனவரி 2026 முதல் ஜீலை 2026 முடிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் கஞ்சா 354.845 கி.கி, மெத்தபெட்டமின் 0.075 கி.கி, கஞ்சா சாக்லேட் 1444 எண்ணிக்கை (7.660) மற்றும் கஞ்சா மாத்திரைகள் 12837 எண்ணிக்கை கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும்,இதுவரைகஞ்சா குறித்து 70 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூபாய் 22,00,000 /- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றுவது தொடர்பாக, 16 சிறப்பு குழுக்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர்அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி, 16 குழுக்களில் காவல்துறை, உணவுப்பாதுகாப்புத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர். மேற்படி கூட்டுப்புலத்தணிக்கைக்குழுவினரால் இதுவரை ஜனவரி 2026 முதல் ஜீலை 2026 முடிய தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் 4403.36 கி.கி கைப்பற்றப்பட்டு அபராதத்தொகை ரூ.1,74,39 ,300/- விதிக்கப்ப ட்டுள்ளது. மேலும், விதிகள் மீறி செயல்பட்டதற்காக 555 கடைகள் மூடப்பட்டுள்ளது.470நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரைதடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தொட ர்பாக, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்துத்துறை அலுவலர்கள் மூலமும் 3371 இடங்களில் நடைபெற்றுள்ளது. DRUG FREE TN APP மூலம் போதைப் பொருட்கள் விற்பனை குறித்து 502 புகார்கள் பெறப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்ட புகார்களில் தகவல் அறிக்கைபதிவுசெய்யப்பட்டு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்கள் அனைவரும் போதைப்பொருள் தொடர்பான புகார்களை DRUG FREE TN APP ஐ பதிவிறக்கம் செய்து, புகார் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# MEA condemns defacement of Indian Embassy in Slovenia, calls for action against 'antiIndia elements'



India on Monday condemned the defacing of its embassy in Slovenia, purportedly by pro-Khalistan elements, and called on Slovenian authorities to hold the perpetrators accountable.

"We condemn the defacement of the premises of our embassy in Ljubljana, Slovenia, by anti-India elements," the external affairs ministry said in a statement without giving details of who was responsible for the incident.

People familiar with the matter said pro-Khalistan elements were behind the defacing of the embassy with anti-India slogans.

Diplomatic premises 'must be protected'

The external affairs ministry said that under the Vienna Convention, diplomatic premises are "inviolable and must be protected".

The Indian side has taken up the "matter strongly" with Slovenian authorities in New Delhi and in Ljubljana so that "the perpetrators behind such reprehensible acts are held accountable".

"We also call upon law enforcement authorities elsewhere to take note of the hateful propaganda and disinformation being spread by such groups," the statement said.

Pro-Khalistan groups have been responsible for defacing and vandalising India's diplomatic missions in countries such as the UK, the US and Canada in recent years.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.